பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

26 12 2025 FRIDAY 7.15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மாநிலங்களின் தலைமைச்செயலர்கள் பங்கேற்றுள்ள மூன்று நாள் மாநாடு இன்று புதுதில்லியில் தொடங்கியது.

2. தரமான மருந்து உற்பத்தியை உறுதி செய்வதில் மருந்தியல் ஆணையம் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர். ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

3. அமெரிக்காவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

4. குஜராத்தில் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 4 புள்ளி ஆறாக பதிவானது.

5. இந்தியா – இலங்கை இடையேயான மூன்றாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி, திருவனந்தபுரத்தில் சற்றுமுன் தொடங்கியது.

>>>>>><<<<<<

மாநிலங்களின் தலைமைச்செயலர்கள் பங்கேற்றுள்ள மூன்று நாள் மாநாடு இன்று புதுதில்லியில் தொடங்கியது. இந்த மாநாட்டில், பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளையும், நாளை மறுநாளும் பங்கேற்கிறார்.

மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

மாநில மொழிகளின் வளர்ச்சிக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், அரசியல் சாசனம் Santhali மொழியில் வெளியிடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்தாலி மொழி பேசுபவர்களுக்கு இது பெருமை அளிக்கக்கூடியது என்றும் திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

தரமான மருந்து உற்பத்தியை உறுதி செய்வதில் மருந்தியல் ஆணையம் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்த ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள், பல்வேறு நாடுகளுக்கு விநியோகம் செய்யப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மருந்துகளும் தரமாக இருப்பதை மருந்தியல் ஆணையம் உறுதி செய்து வருவதாக திரு. ஜெ.பி. நட்டா கூறினார்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி தொலைநோக்குப் பார்வையுடன் மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக அனைத்து தரப்பினரும் பயனடைந்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், இதன் காரணமாக, நடப்பாண்டில் நாட்டின் வளர்ச்சி சிறப்பாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக ஊடகத்தில் வெளியான கட்டுரை ஒன்றையும் டாக்டர். எல். முருகன் பகிர்ந்துள்ளார்.

>>>>>><<<<<<

அமெரிக்காவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், பரஸ்பரம் பயனளிக்கும் வகையில் இந்த பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

இதேபோல் ஐரோப்பிய யூனியனுடனான தடையற்ற வர்த்த ஒப்பந்தம் குறித்த பேச்சுக்களும் தொடர்ந்து நடைபெற்று வருவதாக திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் கூறினார்.

>>>>>><<<<<<

ராஜஸ்தான் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களின் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மேம்பாட்டிற்காக 723 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.

15வது நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் நடப்பு நிதியாண்டிற்கான முதல் தவணையாக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ராஜஸ்தானுக்கு 448 கோடி ரூபாயும், ஜார்க்கண்ட் மாநிலத்திற்கு 275 கோடி ரூபாயும் விடுவிக்கப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நிலக்கரி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், சுரங்கங்களை தொடங்குவதற்கான நெறிமுறைகளில் தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தொழில்புரிவதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தி தரும் வகையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நிலக்கரித் துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நிலக்கரிச் சுரங்கத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான காலஅவகாசம் தற்போது இரண்டு மாதங்களாக உள்ளதாகவும், இந்த தளர்வுகளுக்குப் பின்னர் இது வெகுவாக குறையும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

அகர்பத்தி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

அகர்பத்தி தொழில் நிறுவனங்கள் வருடத்திற்கு 8 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் புரிவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் அகர்பத்திகள் 150 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும், இதன் மதிப்பு ஆயிரத்து 200 கோடி ரூபாயாக உள்ளதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை, தலைமை தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ்குமார் இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் குறித்தும் இந்த சந்திப்பின் போது தலைமை தேர்தல் ஆணையர் எடுத்துரைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா  கட்சியில் எவ்வித கருத்து வேறுபாடுகளும் இல்லை என்று அக்கட்சியின் தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. உபேந்திரா குஷ்வாஹா தெரிவித்துள்ளார்.

பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,  இதுதொடர்பாக ஊடகங்கள் தவறான செய்திகளை வெளியிட்டு வருவதாக கூறினார்.

>>>>>><<<<<<

ஹரியானாவின் Rakhigarhi புராதன சின்னத்தை மேம்படுத்துவதற்காக 500 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கியுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. Nayab Singh Saini கூறியுள்ளார்.

Rakhigarhi-யில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், யுனெஸ்கோவின் புராதன சின்னங்கள் பட்டியலில் இதனை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட இந்த புராதன சின்னத்தை, மேம்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு. Nayab Singh Saini கூறினார்.

>>>>>><<<<<<

குஜராத்தில் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 4 புள்ளி ஆறாக பதிவானது.

இதனைத் தொடர்ந்து ஆறு முறை நில அதிர்வும் உணரப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

மஹாராஷ்ட்ராவில் போதைப்பொருள் கடத்தியது தொடர்பாக 9 பேரை அம்மாநில காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

மும்பை அருகே கைது செய்யப்பட்ட அவர்களிடமிருந்து 33 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

கர்நாடகா சட்டப்பேரவைக்கு முன்கூட்டியே தேர்தல் வர வாய்ப்புள்ளதாக அம்மாநில பிஜேபி தலைவர் திரு. விஜயேந்திரா கூறியுள்ளார்.

பெங்களூருவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஆளும் காங்கிரஸ் அரசு, உட்கட்சி பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தேர்தல் எப்போது நடந்தாலும், பிஜேபி அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றிபெறும் என்று திரு. விஜயேந்திரா நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>>><<<<<<

BRS தலைவருக்கு எதிராக கண்ணியக்குறைவான கருத்துக்களை தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி தெரிவித்துள்ளது கண்டிக்கதக்கது என்று அக்கட்சியின் செயல் தலைவர் திரு. ராமாராவ் கூறியுள்ளார்.

ஹைதாரபாதில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தங்கள் கட்சி கண்ணியத்துடன் செயல்படுவதை பலவீனமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஆசியாவின் மிகப்பெரிய தொழில்நுட்ப விழாக்களில் ஒன்றான, சென்னை ஐ.ஐ.டி-யின் வருடாந்திர தொழில்நுட்பத் திருவிழா, அடுத்த மாதம் 2ஆம் தேதி தொடங்கி 6 ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக அதன் இயக்குநர் திரு. காமகோடி கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்கவுள்ளதாக தெரிவித்தார்.

இதில், கண்காட்சி, பயிலரங்கு, மாநாடு, போட்டிகள் உள்ளிட்ட 80 நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளதாக அவர் கூறினார்.

சென்னை ஐஐடி-யின் கண்டுபிடிப்புகள் இதில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகவும் திரு. காமகோடி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள மலேசிய முன்னாள் பிரதமர் திரு. Najib Razak குற்றவாளி என்று கோலாலம்பூர் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திரு. Najib Razak-க்கு எதிராக, அதிகார துஷ்பிரயோகம், நிதி முறைகேடு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளை நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

>>>>>><<<<<<

சிரியாவில் நேரிட்ட குண்டுவெடிப்பு சம்பவத்தில் 5 பேர் உயிரிழந்தனர், 21 பேர் காயமடைந்தனர்.

வழிபாட்டு தலம் ஒன்றில் நேரிட்ட இந்த குண்டுவெடிப்பு சம்பவம் குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்ப்பட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>>><<<<<<

ஜப்பானில் நேரிட்ட கத்திக்குத்து சம்பவத்தில் 14 பேர் காயமடைந்தனர்.

Mishima-வில் உள்ள ரப்பர் தொழிற்சாலையில் கத்தியுடன் புகுந்த நபர் இந்த தாக்குதலை நடத்தியதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட நபர் கைது செய்யப்பட்டு அவரிடம் விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர்கள் மேலும் கூறினர்.

>>>>>><<<<<<

இந்தியா - இலங்கை இடையேயான மூன்றாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி, திருவனந்தபுரத்தில் சற்றுமுன் தொடங்கியது

இதில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

இதனையடுத்து முதலில் பேட் செய்து வரும் இலங்கை சற்றுமுன்வரை 4 புள்ளி 3 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 25 ரன் எடுத்துள்ளது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெற்று இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

>>>>>><<<<<<

உலக Rapid மற்றும் Blitz செஸ் சாம்பியன் போட்டி, தோஹாவில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் Gukesh, Praggnanandhaa, Nihal Sarin, Hari Krishna, Koneru Humpy, Harika Dronavalli, Vaishali, Divya Deshmuk, Vantika Agrawal உட்பட 40-க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

>>>>>><<<<<<<

தேசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் மத்தியப்பிரதேசத்தின் சூரஜ் சர்மா இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் சீனியர் மற்றும் ஜூனியர் 25 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கங்களை கைப்பற்றினார்.

>>>>>><<<<<<<

விஜய் அஸாரே கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் மத்தியப்பிரதேச அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் தமிழக அணியை வென்றது.

>>>>>>END<<<<<<<